# கரங்கள் ஏந்தும் காணிக்கை

கரங்கள் ஏந்தும் காணிக்கை
கடவுள் அவரே என் நம்பிக்கை - 2
இதய வானில் ஒளிரும் தீபம்
இறைவன் அருளன்பினால் ஆ ஆ ஆ

**1)**
எங்கு நோக்கினும் எங்கு பார்க்கினும்
அன்பின் வாக்கினில் உலகம்
இந்த வாழ்க்கையின் சொந்தம் யாரென
சந்தம் பாடிடும் மனமே
வீடும் நாடும் தேடும் யாவும்
போய் விலகிடும்
தேவன் அருளே என் ஜீவன் முழுதும் நின்றிடும்ஆ ஆ ஆ

( கரங்கள் ஏந்தும் )

**2)**
வந்த காலங்கள் தந்த பாடங்கள்
கொண்ட கோலங்கள் அவரே
தந்த யாவுமே சென்று வாயென
இன்று போய்விடும் நிலையில்
அன்றுமின்றும் என் தேவன் என்னில்
நின்று நிதமும் என் காவவாய்
என்றும் எந்தன் நெஞ்சம் தன்னில் வாழ்கின்றார்ஆ ஆ ஆ

( கரங்கள் ஏந்தும் )